**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆனி திங்கள் 16–ம் நாள்
2025–ம் ஆண்டு ஜூன் மாதம் 30–ம் நாள் திங்கட்கிழமை
******

**இடைமனு எண். 2/2023–ல் அசல் வழக்கு எண். 192/2012**

நஜீர் அகமது ....மனுதாரர்/வாதி

...எதிர்...

1. பக்கீர் முகமது
2. வினோத் .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக இன்று 17.06.2025 இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. E.செல்வராஜ் அவர்களும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர் /வாதியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண் 188 /2016 மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு பண ஆலுகை வரம்பிற்க்காக மாற்றலாகி நடைபெற்று வரும் அசல் வழக்கு எண் 33 /2023 உடன் Joint trail ஆக நடத்த இந்த அசல் வழக்கு எண் 192/2012 –ஐ மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு Transfer செய்யும் வரை இந்த வழக்கின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்க Stay செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–151 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.06.30 17:54:08 +0530

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மேற்படி நம்பரில் மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது வழக்கு சொத்துகளை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும், விளம்பல் பரிகாரத்திற்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி நம்பரில் எதிர்மனுதாரர்களும் /பிரதிவாதிகளும் ஆஜராகி எதிர்வழக்குறை தாக்கல் செய்து கட்சியாடி வருகின்றனர். இந்த நிலையில் நீதிமன்றத்தில் இந்த எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் மீதும் மற்றும் பல நபர்கள் மீதும் தாவா வழக்கு சொத்துகளை பொறுத்தும் மற்றும் இதில் சேராத இதர சொத்துகளை பொறுத்தும் அசல் வழக்கு எண் 188/2016 பாகபிரிவினைக்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்கும் வழக்கு தாக்கல் செய்து மேற்படி இரண்டு வழக்குகளும் நீதிமன்றத்தால் Joint trail ஆக நடத்த உத்திரவாகி, இரண்டு வழக்குகளும் சேர்ந்து நடத்தப்பட்டு வந்துள்ளது.

(ii) இந்த நிலையில் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 188/2016 பண ஆலுகை வரம்பிற்காக மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றலாகி அசல் வழக்கு எண் 33/2023 ஆக நம்பர் ஆகி, வழக்கு 04.09.2023 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. எனவே மேற்படி அசல் வழக்கு எண் 188/2016 பண ஆலுகை வரம்பிற்காக மாற்றலாகி மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதால் இந்த வழக்கை மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு Joint trail ஆக நடத்த மாற்றல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி வழக்கு மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றல் ஆகும் வரை இந்த வழக்கின் அனைத்து நடவடிக்கைகளையும் நிருத்தி வைக்க Stay செய்ய உத்திரவிட வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. இல்லையென்றால் மனுதாரர்/வாதிக்கு ஏராள கஷ்டமும். நஷ்டமும் சம்பவிக்கும். எனவே மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.06.30 17:54:19 +0530

வேண்டும்.

2. <u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>

மனுதாரர் மனு சரியல்ல, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்க கூடியது அல்ல. மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை மாற்றல் செய்யும் வரை, இந்த வழக்கை stay செய்ய முடியாது. மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் தான் stay கேட்க வேண்டும். மேலும் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்ற வழக்கிலும் கோரப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண் 188/2016 மாற்றலாகி ஆறு மாதத்திற்கு மேல் ஆகிறது. வேண்டுமென்றே வழக்கு விசாரணையை காலம் கடத்த வேண்டி மாற்றல் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. இதுநாள் வரை மனுதாரர்/வாதி மாற்றல் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?**

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5.தீர்வு:</u>

(i)அசல் வழக்கனாது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது வழக்கு சொத்துக்களை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும், விளம்பல் பரிகாரத்திற்கும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் தாவா வழக்கு சொத்துகளைப் பொறுத்தும் மற்றும் இதில் சேராத இதர சொத்துக்களை பொறுத்தும் அசல் வழக்கு எண் 188/2016

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.06.30 17:54:28 +0530

பாகபிரிவினைக்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்கும் வழக்கு தாக்கல் செய்து மேற்படி இரண்டு வழக்குகளும் நீதிமன்றத்தால் Joint trail ஆக நடத்த உத்திரவாகி, இரண்டு வழக்குகளும் சேர்ந்து நடத்தப்பட்டு வந்துள்ளது.

(ii) இந்த நிலையில் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 188/2016 பண ஆலுகை வரம்பிற்காக மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றலாகி அசல் வழக்கு எண் 33/2023 ஆக நம்பர் ஆகியுள்ளது, எனவே மேற்படி அசல் வழக்கு எண் 188/2016 மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதால் இந்த வழக்கை Joint trail ஆக நடத்த மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றல் ஆகும் வரை இந்த வழக்கின் அனைத்து நடவடிக்கைகளையும் நிருத்தி வைக்க Stay செய்ய உத்திரவிட கோரி மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

(iii) மேலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு இந்த வழக்கை மாற்றல் செய்யும் வரை, இந்த வழக்கை stay செய்ய முடியாது என்றும், மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் தான் stay கேட்க வேண்டும் என்றும், அசல் வழக்கு எண் 188/2016 மாற்றலாகி ஆறு மாதத்திற்கு மேல் ஆகிறது என்றும், இதுநாள் வரை மனுதாரர்/வாதி மாற்றல் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலம் கடத்தி வருகிறார் என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

**இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.**

(iv) இந்த வழக்கில் மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது வழக்கு சொத்துகளை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும், விளம்பல் பரிகாரத்திற்கும் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. இந்த சூழ்நிலையில் எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் மீதும் மற்றும் பல நபர்கள் மீதும் தாவா வழக்கு சொத்துக்களை பொறுத்தும் மற்றும் இதில் சேராத இதர

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.06.30 17:54:37 +0530

சொத்துகளை பொறுத்தும் அசல் வழக்கு எண் 188/2016 தாக்கல் செய்து மேற்படி இரண்டு வழக்குகளும் நீதிமன்றத்தால் Joint trail ஆக நடத்த உத்திரவாகி, நடத்தப்பட்டு வந்துள்ளது.

(v) அசல் வழக்கு எண் 188/2016 பண ஆலுகை வரம்பிற்காக மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றலாகி அசல் வழக்கு எண் 33/2023 ஆக நம்பர் ஆகி நிலுவையில் உள்ளது. எனவே இந்த வழக்கை மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு Joint trail ஆக நடத்த மாற்றல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும், அதுவரையில் இந்த வழக்கின் அனைத்து நடவடிக்கைகளையும் நிருத்தி வைக்க Stay செய்ய உத்திரவிட வேண்டி மனுதாரர்/வாதி தரப்பில் வாதிடப்பட்டாலும், இதுநாள் வரையில் மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு மாற்றலாக போகும் மனுவினை எடுத்துக்காட்டும் விதமாக எவ்வித வழக்கு எண்ணோ, ஆவணங்களோ இந்த நீதிமன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் இந்த வழக்கை மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றல் செய்யும் வரை இந்த வழக்கை நிறுத்தி வைக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் தான் இந்த மனுவை தாக்கல் செய்ய முடியும்.

(vi) மேலும் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனையில் அசல் வழக்கு 188/16 மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் மாற்றலாகி ஆறு மாதத்திற்கு மேலாகியும் இந்த வழக்கை மாற்றம் செய்ய எந்த நடவடிக்கையும் மனுதாரர்/வாதி தரப்பில் எடுக்கவில்லை என்றும், வேண்டுமென்றே வழக்கு விசாரணையை கால தாமதப்படுத்த வேண்டும் என்பதற்காகவே மாற்றம் செய்ய நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்ற எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் கூற்றில் நியாயமான காரணம் இருப்பதாகவே இந்நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது. உண்மையிலேயே இந்த மனுதாரர் /வாதிக்கு இந்த அசல் வழக்கை மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றல் செய்ய வேண்டும் என்றால்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.06.30 17:54:47 +0530

இந்நேரம் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து இருப்பார். இந்த மனு தாக்கல் செய்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகியும் இந்நாள் வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாண்பமை மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் எந்த மனுவும் தாக்கல் செய்யவும் இல்லை, அதற்குரிய எந்த வழக்கு எண்ணும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவும் இல்லை. எனவே இந்த மனுவில் நற்கூறுகள் எதுவும் இல்லாத காரணத்தால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்பட்டு அவ்வாறே இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில், இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜூன் மாதம் 30–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.06.30 17:54:56 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.06.30 17:55:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.2/2023–ல்
அசல் வழக்கு எண்.192/2012
நாள்.30.06.2025.